ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය
இலங்கையின் பிரதம மந்திரி
Prime Minister of Sri Lanka

2021 மே 03 ஆம் திகதி

# உலக தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் சங்க தினம் 2021 இற்கான பிரதம அமைச்சரின் செய்தி

உலகம் பூராகவும் வாழ்கின்ற பில்லியன் கணக்கான மக்கள் மீது சாதகமான தாக்கமொன்றை ஏற்படுத்துவதில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை மேம்படுத்தி ஒவ்வொரு வருடமும் மே மாதம் 17 ஆம் திகதி உலக தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் சங்க தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தேசிய மற்றும் / அல்லது தனிப்பட்ட இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதற்கு நாட்டுக்கும் மற்றும் அதன் சமூகத்திற்கும் மிகவும் பலம்வாய்ந்த கருவியாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) காணப்படுகின்றது. கொவிட் - 19 தொற்று நோய்க் காலத்தின் போது டிஜிடல் இணைப்பின் அவசரத்தன்மையை உறுதிப்படுத்தி என்றுமில்லாதவாறு பாரியதொரு பங்களிப்பை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் செய்து கொண்டிருக்கின்றது. “சவால்மிகு நேரத்தின் டிஜிடல் தொழில்நுட்ப பரிமாற்றத்தை அதிகரித்தல்” என்பது உலக தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் சங்க தினம் 2021 இன் தலைப்பாக இருப்பதுடன் தற்பொழுதைய தொற்று நோய் நிலைமையுடன் மிகவும் நெருக்கமாக தொடர்புபட்டுள்ளதாகவும் காணப்படுகின்றது.

சமூகங்களின் பொருளாதார நிலைமைகள் மற்றும் வாழ்க்கைப் பாணியை மாற்றியமைத்து உலகம் பூராகவும் உள்ள சகல நாடுகளில்; கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோய் மிகவும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் இதன் தாக்கமாக அதாவது கல்வி, வங்கித்தொழில், சுகாதாரம் மற்றும் உணவு விநியோகம் போன்ற அனேகமான சேவைகள் நேரலை தளங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, இந்த சர்ச்சையான நிலைமையில் நாங்கள் முகங்கொடுகின்ற சவால்களைச் சந்திப்பதற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தல் மிக முக்கியமாகும்.

இந்த டிஜிடல் யுகத்தில் பிரசைகளின் வாழ்க்கை நியமங்கள் மற்றும் தரத்தை அதிகரிப்பதற்கான வழிகளை 5ஜீ, இணையதள விடயங்கள் மற்றும் செயற்கை புலனாய்வு போன்ற புதிய தொழில்நுட்பங்கள் விரிவுபடுத்தியுள்ளது. சகல மக்களாலும் தரமான வாழ்க்கை போன்றவற்றுக்கான சமமான பிரவேசத்தை உறுதிப்படுத்துவதற்கு நாடுகளுக்கிடையிலும் நாடுகளுக்குள்ளும் டிஜிடல் வேறுபாடுகள் தடைகளை உருவாக்கியுள்ளன. இலங்கையில் டிஜிடல் வேறுபாடுகளுக்கான தீர்வுகளை வழங்கும் பொருட்டு எமது அரசாங்கம் பல முன்னெடுப்புக்களை செய்துள்ளன. நாடு பூராகவும் 4ஜீ இணைப்புக்களை வழங்குவதற்கு இலக்கு வைத்து “கிராமத்திற்கு தொலைத்தொடர்பு” என்ற தேசிய செயற்திட்டத்தின் கீழ் டெலிகொம் கட்டமைப்புக்களை விரிவுபடுத்துவதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது. இந்தச் செயற்திட்டத்தை வெற்றியடைச் செய்வதற்கு எங்களுடைய அரசாங்கம் அதன் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதுடன் இந்த அதி உன்னத முன்னெடுப்பு தொடர்பாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு நன்றி கூறுவதற்கு இச் சந்தர்பத்தை நான் பயன்படுத்திக் கொள்கின்றேன்.

இந்த நிலைமையில் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்திற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன் அத்தோடு அர்த்த பூர்வமான உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சங்க தினத்திற்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ
பிரதம அமைச்சர்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு